***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.206/2024 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | பட்டாபிராமன் |
| *Father/Husband's Name* | சசிக்குமார் |
| *Village* | ரெங்கநாதபுரம் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *25* |

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து மன்னார்குடி கிளையில் RVD மைக்ரோ பைனாஸ்சில் கலெக்சன் ஆபிசராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 செல்லப்பா, அ.சா.2 ஷீலா மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது உறவினர்கள் ஆவார்கள். சென்ற வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் நான் எனது வீட்டிலிருந்தபோது 108 ஆம்புலன்ஸ் எனது தெருவிற்கு வந்தது. அந்த 108 ஆம்புலன்ஸில் செல்லப்பா என்பவரை அழைத்துச் சென்றார்கள். அதன்பிறகு நான் அங்கிருந்தவர்களிடம் என்னவென்று கேட்டபோது எதோ பிரச்சனை என்று சொன்னார்கள். யாரோடு பிரச்சனை என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 12.09.2024-ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.1

செல்லப்பாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டு எதிரிகள் மணியன், அவரது மகன் ரமேஷ்குமார் ஆகியோர்கள் அ.சா.1 செல்லப்பாவை தகாத வார்த்தைகள் சொல்லி திட்டியும், மண்வெட்டியால் வெட்டியதால் அ.சா.1 முதுகில் ரத்தக்காயம் ஏற்பட்டதென்றும், அ.சா.1ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள் என்றும், அதை நான் கேள்விபட்டேன் என்றும், போலிசார் விசாரணையில் கேள்விபட்ட உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் இருதரப்பினர்களும் எனக்கு உறவினர்கள் என்ற காரணத்தினாலும், அவர்களிடம் எவ்வித பொல்லாப்பும் பெறமால் இருப்பதற்காகவும், எனக்கே தெரிந்த காரணத்தினால் அ.சா.1 ற்கு என்ன காயம், யாரால் ஏற்பட்டதென்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 18.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
*CC.No.206/2024 – P.W. 5 (LW-6)*

| | |
|---|---|
| *Name* | ஜெயபால் |
| *Father/Husband's Name* | வெங்கடாஜலம் |
| *Village* | ரெங்கநாதபுரம் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *65* |

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 செல்லப்பா, அ.சா.2 ஷீலா மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனக்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள். சாட்சி வேலாயுதம் என்பவரை தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**சாட்சியின் மூலம் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதல்ல. என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 12.09.2024ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.1 செல்லப்பாவிற்கும் ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 19.09.2024-ம் தேதியன்று இரவு 19.20 மணியளவில் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து என் முன்னிலையிலும், வேலாயுதம் முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், மேலும், மேற்படி சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்திய மரக்கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றை எதிரிகள் வீட்டின் அருகிலிருந்து போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் உண்மையை கூறிவிட்டு தற்சமயம் பார்வைமகரிலுள்ள கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்றும், மேற்படி இருதரப்பினர்களும் எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், இருதரப்பினர்களுக்கிடையே நடுநிலையாக இருப்பதற்காக வேண்டி உண்மை சங்கதிகளை மறைத்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 18.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.206/2024 – P.W. 6 (LW-7)***

| | |
|---|---|
| *Name* | வேலாயுதம் |
| *Father/Husband's Name* | நமச்சிவாயம் |
| *Village* | ரெங்கநாதபுரம் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *53* |

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 செல்லப்பா, அ.சா.2 ஷீலா மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனக்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள். சாட்சி ஜெயபால் என்பவரை தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (**சாட்சியின் மூலம் பார்வைமகசரிலுள்ள** இரண்டாவது **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்.(**சாட்சியின் மூலம் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும்**

**குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 12.09.2024ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.1 செல்லப்பாவிற்கும் ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 19.09.2024-ம் தேதியன்று இரவு 19.20 மணியளவில் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து என் முன்னிலையிலும், ஜெயபால் முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், மேலும், மேற்படி சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்திய மரக்கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றை எதிரிகள் வீட்டின் அருகிலிருந்து போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் உண்மையை கூறிவிட்டு தற்சமயம் பார்வைமகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிரிலுள்ள கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, மேற்படி இருதரப்பினர்களும் எனது தெருக்காரர்கள் என்பதாலும், இருதரப்பினர்களுக்கு இடையே நடுநிலையாக இருப்பதற்காக வேண்டி உண்மை சங்கதிகளை மறைத்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 18.02.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 266/2025– P.W. 5 (LW-4)***

| | |
|---|---|
| *Name* | வேல்முருகன் |
| *Father's Name* | ஞானசிகாமணி |
| *Village* | பைங்காநாடு |
| *Taluk* | மன்னார்குடி |
| *Age* | 48 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, 2, 4 மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர்களை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் எனக்கு தெரியும். சுமார் 6 மாதம் முன்பாக ஒரு நாள் தேதி மாதம் ஞாபகமில்லை. காலை சுமார் 8-9 மணியளவில் நான் எனது வயலுக்கு சென்றக்கொண்டிருந்தேன். சேகர் மற்றும் கலையரசன் ஆகியோர்களது வயலை தாண்டி நான் எனது வயலுக்கு செல்லமுடியும். அப்படி நான் எனது வயலுக்கு சென்றுக்கொண்டிருந்த போது, சேகர், கலையரசன் வயல் அருகிலுள்ள மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது. நான் அந்த கூட்டத்திலிருந்தவர்களிடம் ஏன் கூட்டமாக இருக்கிறது என கேட்டபோது, சேகர் என்பவருக்கும் கலையரசன் என்பவருக்கும் சண்டை என்று சொன்னார்கள். அதில் யாருக்கு என்ன காயம் ஏற்பட்டதென்று நான் கேட்கவில்லை. எனக்கு அவசரமாக வேலை இருந்ததால் நான் அதை முழுவதுமாக கேட்கவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கடந்த 11.06.2025-ம் தேதி காலை 7.00 மணியளவில் அ.சா.1 கலையரசன் என்பவரின் வயலுக்கு விவசாய வேலைக்காக வீரமணி என்பவர் ஏற்கலப்பையை எடுத்துக்கொண்டு சென்றார்கள். கலையரசன் வயலும், ஆஜர் எதிரியின் வயலும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். இரண்டு நபர்களின் வயலுக்கு நடுவே வரப்பு உள்ளது என்றால் சரிதான். கலையரசன் மனைவி பிரபா என்பவர் இருவருக்கும் பொதுவான வரப்பில் மாட்டை பிடித்துக்கொண்டு வரப்பில் சென்றபோது, ஆஜர் எதிரி இந்த பாதையில் போகக்கூடாதென்று தகராறு செய்தார் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.2 பிரபாவின் பின்னால் வந்துக்கொண்டிருந்த அ.சா.1 கலையரசன் என்பவரை பார்த்து ஆஜர் எதிரி கொச்சை வார்த்தைகளால் திட்டியும், மண்வெட்டியின் பின்புறகழியால் அடித்தார் என்றும், அதில் கலையரசனுக்கு இடதுகண் புருவம், கண் ஆகிய இடங்களில் வீக்க காயம் ஏற்ப்பட்டதென்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நானும், வீரமணி என்பவரும் ஆஜர் எதிரியிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என கேட்டபோது ஆஜர் எதிரி மண்வெட்டியை காட்டி கலையரசனை கொலை மிரட்டல் விடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. காயம்பட்ட கலையரசனை அவரது மனைவி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும், உண்மை சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் அ.சா.1, 2 மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர்கள் எனது தெருக்காரர்கள் என்ற காரணத்தினாலும், இருதரப்பினரிடமும் எவ்வித பொல்லாப்பும் ஏற்படாமல் இருப்பதற்காகவும், எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 18.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.